# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2017/36 - 2017 මැයි මස 05 වැනි සිකුරාදා - 2017.05.05

2017/36 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ 21/78* (xiii)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 140 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 18 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

*2017, மே 04.*

கட்டளைச் சட்டம்

இக்கட்டளைச் சட்டம் 2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பட்டப்பின் மருத்துவ நிறுவகத் (திருத்தச்) கட்டளைச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படுவதன்மேல் வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. 2014 ஆம் ஆண்டு யூலை 30 ஆந் திகதிய 1873/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டு ஏப்பிறல் 10 ஆந் திகதிய 83/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பட்டப்பின் மருத்துவ நிறுவகக் கட்டளைச் சட்டம் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அதன் 13 ஆம் பந்தியில் -

(i) இப்பந்தியின் (அஓ) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(அஔ) எழும்பியல் அறுவை மருத்துவம்.".

(2) அதன் 25 ஆம் பந்தியில் -

(ii) "மருவத்துவத்திலான சிறப்புக் கூறு" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் "மேகநோயியல் அல்லது காலத்துக்குக்காலம் நிறுவனத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின்மேல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் சிறப்புக்கூறு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மேகநோயியல், எழும்பியல் அறுவை மருத்துவம் அல்லது காலத்துக்குக்காலம் நிறுவனத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின்மேல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் சிறப்புக்கூறு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

05-577

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.